**வாக்குமூலம்**

**சார்பு நீதிமன்றம், ஒட்டன்சத்திரம்.**

**S.C.No.102/2024**

**வழக்கு சாட்சி P.W.6**

**1873ம் ஆண்டின் 10வது விதியின்படி திரு.பெரியசாமி அவர்களால் திறந்த நீதிமன்றத்தில் சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : வேலுச்சாமி | தொழில் | : விவசாயம் |
| தகப்பனார் பெயர் | : கருப்பணகவுண்டர் | கணவர் பெயர் | : --- |
| கிராமம் | : காவேரியம்மாபட்டி | வயது | : சுமார் 64 |
| தாலுக்கா | : ஒட்டன்சத்திரம் | நாள் | : 02.02.2026 |
| மாவட்டம் | : திண்டுக்கல் | | |

முதல் விசாரணை :

இந்த வழக்கை பற்றி எனக்கு என்ன தெரியும் என்றாலும், எப்போது எங்கு என்ன நடந்தது என்றாலும் ? எனக்கு வழக்கு பற்றி எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை. காவல் துறையினர் என்னை கையெழுத்து போடச் சொன்னார்கள் போட்டேன். அவ்வளவு தான் எனக்கு தெரியும். பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது கையொப்பம் மட்டும் அ.சா.ஆ–6.

புலன் விசாரணை அதிகாரி கடந்த 10.11.2016ம் தேதி பதிவு செய்யப்பட்ட வாக்குமூலத்தின் தன்மை படி சாட்சியம் அளிக்காமல் சாட்சியானவர் வழக்கு பற்றி எதுவும் தெரியாது என்று சாட்சியம் அளித்துள்ளதால் அரசு தரப்பில் குறுக்கு விசாரணை மேற்கொள்ள அனுமதியளிக்கப்படுகிறது.

நான் காப்பிலியபட்டியில் வசித்து வருகிறேன் என்றால் ? சரியல்ல. ராயக்கவுண்டன்புதூரில் வசித்து வருகிறேன். எனது நிலத்திற்கு கிழக்கே பழனிச்சாமி மனைவி பாக்கியதம்மாள் என்பவருடைய நிலம் உள்ளது என்றால் ? இல்லை. மதுவிலக்கு காவல் ஆய்வாளர் கடந்த 10.11.2016ம் தேதி காலை 07.00

மணிக்கு விசாரணை மேற்கொண்டார் என்றால் ? இல்லை. சம்பவ இடத்தை பார்வையிட்ட போது அங்கு நான் இருந்தேன் என்றாலும், பார்வை மகஜர் காவல் ஆய்வாளர் தயார் செய்ததில் நான் கையெழுத்து செய்யவில்லை என்றால் ? சரியல்ல. எதற்காக கையெழுத்து வாங்கினார்கள் என்று எனக்கு தெரியாது. நான் பார்வை மகஜரில் கையெப்பம் செய்து விட்டு மாதிரி வரைபடம் தயார் செய்த போது உடன் இருந்துவிட்டு ஏதோ ஒரு காரணத்திற்க்காக வேண்டி பார்வை மகஜர் தயார் செய்த விபரம், மாதிரி வரைபடம் தயார் செய்த விபரம் எனக்கு தெரியாது என்று சொல்கிறேன் என்றால் ? சரியல்ல.

**குற்றம்சாட்டப்பட்டவர் தரப்பில் மேற்கொள்ளப்படும் குறுக்கு விசாரணை**

இல்லை.

C JAYAPPRAKASH

Digitally signed by C JAYAPPRAKASH
Date: 2026.02.02 18:42:22 +0530

சார்பு நீதிபதி

ஒட்டன்சத்திரம்

**வாக்குமூலம்**
**சார்பு நீதிமன்றம், ஒட்டன்சத்திரம்.**
**S.C.No.102/2024**
**வழக்கு சாட்சி P.W.5**
**1873ம் ஆண்டின் 10வது விதியின்படி திரு.பெரியசாமி அவர்களால் திறந்த நீதிமன்றத்தில் சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : தங்கவேல் | தொழில் | : விவசாயம் |
| தகப்பனார் பெயர் | : முத்துகவுண்டர் | கணவர் பெயர் | : --- |
| கிராமம் | : காவேரியம்மாபட்டி | வயது | : சுமார் 57 |
| தாலுக்கா | : ஒட்டன்சத்திரம் | நாள் | : 02.02.2026 |
| மாவட்டம் | : திண்டுக்கல் | | |

முதல் விசாரணை :

இந்த வழக்கை பற்றி எனக்கு என்ன தெரியும் என்றாலும், எப்போது எங்கு என்ன நடந்தது என்றாலும் ? எனக்கு வழக்கு பற்றி எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை. காவல் துறையினர் என்னை கையெழுத்து போடச் சொன்னார்கள் போட்டேன். அவ்வளவு தான் எனக்கு தெரியும். பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையொப்பம் மட்டும் அ.சா.ஆ–5.

புலன் விசாரணை அதிகாரி கடந்த 10.11.2016ம் தேதி பதிவு செய்யப்பட்ட வாக்குமூலத்தின் தன்மை படி சாட்சியம் அளிக்காமல் சாட்சியானவர் வழக்கு பற்றி எதுவும் தெரியாது என்று சாட்சியம் அளித்துள்ளதால் அரசு தரப்பில் குறுக்கு விசாரணை மேற்கொள்ள அனுமதியளிக்கப்படுகிறது.

அரசு தரப்பில் மேற்கொள்ளப்படும் குறுக்கு விசாரணை

நான் காப்பிலியபட்டியில் வசித்து வருகிறேன் என்றால் ? சரியல்ல. ராயக்கவுண்டன்புதூரில் வசித்து வருகிறேன். எனது நிலத்திற்கு கிழக்கே பழனிச்சாமி மனைவி பாக்கியதம்மாள் என்பவருடைய நிலம் உள்ளது என்றால் ?

இல்லை. மதுவிலக்கு காவல் ஆய்வாளர் கடந்த 10.11.2016ம் தேதி காலை 07.00 மணிக்கு விசாரணை மேற்கொண்டார் என்றால் ? இல்லை. சம்பவ இடத்தை பார்வையிட்ட போது அங்கு நான் இருந்தேன் என்றாலும், பார்வை மகஜர் காவல் ஆய்வாளர் தயார் செய்ததில் நான் கையெழுத்து செய்யவில்லை என்றால் ? சரியல்ல. எதற்காக கையெழுத்து வாங்கினார்கள் என்று எனக்கு தெரியாது. நான் பார்வை மகஜரில் கையெப்பம் செய்து விட்டு மாதிரி வரைபடம் தயார் செய்த போது உடன் இருந்துவிட்டு ஏதோ ஒரு காரணத்திற்க்காக வேண்டி பார்வை மகஜர் தயார் செய்த விபரம், மாதிரி வரைபடம் தயார் செய்த விபரம் எனக்கு தெரியாது என்று சொல்கிறேன் என்றால் ? சரியல்ல.

<u>குற்றம்சாட்டப்பட்டவர் தரப்பில் மேற்கொள்ளப்படும் குறுக்கு விசாரணை</u>

இல்லை.

C JAYAPPRAKASH

Digitally signed by C JAYAPPRAKASH
Date: 2026.02.02 18:42:29 +0530

சார்பு நீதிபதி

ஒட்டன்சத்திரம்

**வாக்குமூலம்**
**சார்பு நீதிமன்றம், ஒட்டன்சத்திரம்.**
**S.C.No.102/2024**
**வழக்கு சாட்சி P.W.4**
**1873ம் ஆண்டின் 10வது விதியின்படி திரு.பெரியசாமி அவர்களால் திறந்த நீதிமன்றத்தில் சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : K.லோகநாதன் | தொழில் | : சிறப்பு சார்பு ஆய்வாளர் |
| தகப்பனார் பெயர் | : கருப்புச்சாமி | கணவர் பெயர் | : --- |
| கிராமம் | : பழனி | வயது | : சுமார் 58 |
| தாலுக்கா | : பழனி | நாள் | : 02.02.2026 |
| மாவட்டம் | : திண்டுக்கல் | | |

முதல் விசாரணை :

நான் தற்போது திண்டுக்கல் மாவட்டம், பழனி சரக போக்குவரத்து காவல் நிலையத்தில், காவல் சிறப்பு காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் பழனி மதுவிலக்கு அமலாக்கபிரிவில் தலைமை காவலராக பணிபுரிந்து வந்த போது கடந்த 2016ம் ஆண்டு சுமார் 10 ஆண்டுகளுக்கு முன்பு அம்பிளிக்கை சரக பகுதியில் ராயக்கவுண்டன்புதுார் பழனிச்சாமி என்பவரது தோட்டத்தில் கள்ளச்சாராயம் வெள்ளைக் கேனில் இருந்ததாக ஆய்வாளர் திரு.பாலமுருகன் என்பவருக்கு கிடைத்த தகவலின் பேரில் நானும், தலைமை காவலர் பிரபாகரனும் தோட்டத்திற்கு சென்றோம். பழனிச்சாமி என்பவரின் தோட்டத்தில் ஆஜர் எதிரி நின்று கொண்டிருந்தார். எங்களை பார்த்தவுடன் ஓடுவதற்கு முயற்சி செய்தார். அப்போது நாங்கள் தடுத்து நிறுத்தினோம். 5 லிட்டர் கேனில் சாராயம் வைத்திருந்தார். 40 லிட்டர் பிடிக்க கூடிய மண்பாணையில் 25 லிட்டர் அளவுள்ள சாராய ஊரல் வைத்திருந்தார். அந்த சாராய ஊரலை தோண்டி எடுத்தோம். அந்த ஊரை சார்ந்த கிராம நிர்வாக அலுவலர் உதவியாளரை வரழைத்தோம். அவர் வந்திருந்தார். அப்போது கிராம நிர்வாக அலுவலர், அவருடைய உதவியார் வந்திருந்தார். அப்போது சாராய ஊரலை அங்கே கொட்டி

அழித்துவிட்டோம். அங்கே சராய ஊரலை அழித்த போது அழித்தல் மகஜர் தயார் செய்தோம். 5 லிட்டர் சாராய கேனை கைப்பற்றினோம். தியாகராஜன் என்பவரையும் அழைத்து வந்துவிட்டோம். காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார். வழக்கு விசாரணைக்கு உதவியாக இருந்தேன். காவல் ஆய்வாளரிடம் நடந்ததை சொன்னேன். வாக்குமூலமாக பதிவு செய்து கொண்டார்.

**குற்றம்சாட்டப்பட்டவர் தரப்பில் மேற்கொள்ளப்படும் குறுக்கு விசாரணை**

என்னை காவல் ஆய்வாளர் எங்கு வைத்து, எந்த தேதியில், எத்தனை மணிக்கு விசாரித்தார் என்றால் ? 09.11.2016ம் தேதி மாலை 06.00 மணி முதல் 07.00 மணிக்குள் என்னை பழனி காவல் நிலையத்தில் வைத்து காவல் ஆய்வாளர் பாலமுருகன் என்னை விசாரித்தார். ஆய்வாளர் என்னை விசாரித்தபோது நானும், தலைமை காவலர் பிரபாகர் என்பவரும் சம்பவம் நடந்ததாக சொன்ன இடத்திற்கு சென்றதாக என்னை ஆய்வாளர் விசாரித்த போது சொல்லியுள்ளேன் என்றால் ? ஆமாம். நான் சம்பவ இடத்தை பார்வையிட்ட பிறகு கிராம நிர்வாக உதவியாளரரை வரச் சொன்னதாக சொல்லியுள்ள விபரத்தையும் நான் சொல்லியுள்ளேன் என்றால் ? சரிதான். நான் சம்பவ இடத்திற்கு சென்று பொருட்களை கைப்பற்றிய பிறகு தான் அந்த இடத்திற்கு கிராம நிர்வாக அலுவலரின் உதவியாளர் அங்கு வந்தார் என்றால் ? சரிதான். சாராய ஊரல் கேன் பழனிச்சாமி என்பவரின் தோட்டத்தில் எந்த இடத்தில் குறிப்பாக இருந்தது என்று என்னால் சொல்ல முடியாது என்றால் ? சரியல்ல. பழனிச்சாமி என்பவரின் தோட்டத்திற்கு சாலை முன்புறமாக இருந்தது. அந்த சாலையானது எந்த திசையை நோக்கி இருந்தது என்று என்னால் சொல்ல முடியாது என்றால் ? சரிதான். சாலையானது கீச்சு கொட்டகை என்றால் ? சரிதான். சம்பவ இடத்தில் சாராயத்தை கைப்பற்றியதற்கான வீடியோவோ, புகைப்படமோ எடுக்கவில்லை என்றால் ? சரிதான். நான் சொல்வது போல்

எந்தவிதமான சம்பவமும் நடக்கவில்லை என்றால் ? சரியல்ல. நான் சம்பவ இடத்திற்கு சென்ற நேரம் சுமாராக எவ்வளவு நேரம் இருக்கும் என்றால் ? மாலை சுமார் 05.30 மணிக்கு மேல் இருக்கும். பழனி மதுவிலக்கு அமலாகக் பிரிவு காவல் நிலயத்திற்கும் – ராயகவுண்டன்புதூருக்கும் எவ்வளவு கி.மீ தூரம் இருக்கும் என்றால் ? 20 கி.மீ தூரம் இருக்கும். நான் சொல்வது தவறு என்றாலும், முதல் தகவல் அறிக்கை காலம் 5–ல் 37 கி.மீ தூரம் என்று சொல்லியிருந்தால் ? சரிதான். 37 கி.மீ தூரத்தை பயணம் செய்வதற்கு சுமார் 2 மணி நேரம் ஏற்படுமா என்றால் ? சுமார் 1 மணி நேரம் போதுமானது. சம்பவ இடத்தில் எதிரியை பார்த்த பிறகு ஊரல் பானையை தோண்டி எடுத்து, சாட்சிகள் முன்னனியில் அழித்தல் மகஜர் தயார் செய்து, அங்கு சட்ட விதிமுறைகளை பின்பற்றி வாக்மூலம் பெறுவதற்கு எவ்வளவு நேரம், காலம் எடுத்துக்கொண்டு இருக்கும் என்றால் ? சுமார் 1 மணி நேரம் இருக்கும். நான் சொல்லியுள்ள நேரத்தில்,சொல்லியுள்ள முறையில் சம்பவ இடத்திற்குசெல்லவில்லை என்றாலும், ஆவணங்கள் தயார் செய்யவில்லை என்றாலும், காவல் ஆய்வளார் என்னை சொன்ன நேரத்தில் புலன் விசாரணை மேற்கொள்ளவில்லை என்றாலும் ? சரியல்ல. புள்ளி விபர கணக்கிற்காக போடப்பட்ட வழக்கில் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் ? சரியல்ல.

C JAYAPPRAKASH

Digitally signed by C JAYAPPRAKASH
Date: 2026.02.02 18:42:37 +0530

சார்பு நீதிபதி

ஒட்டன்சத்திரம்